# மத்திய வங்கி தெளிவுபடுத்துகின்றது

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

அண்மைய செய்திக் குறிப்பொன்று, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ கலாநிதி ஹர்ஷா த சில்வா "நாணயச் சபையினை அவரது அமைச்சுக்கு அழைத்து தகவல் தொடர்பூட்டல் முகவராண்மையின் (ICTA) தரங்குறைந்த கொடுப்பனவு நுழைவாயிலை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்." என செய்தி வெளியிட்டது. இக்கூற்று உண்மைக்குப் புறம்பானதாகும்.

தேசிய கொடுப்பனவுத் தளமொன்றின் முன்னேற்ற பாதை தொடர்பில் நீண்டகால பிரச்சனையொன்றினைத் தீர்ப்பதற்காக ஆர்வலர்களுடனான கூட்டமொன்றினை இராஜாங்க அமைச்சர் கூட்டினார். இது பொருளாதாரத்தினை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு முக்கியத்துவமிக்கதொன்றாக இருந்தது,

இக்கூட்டத்தில் பங்குபற்றிய நாணயச் சபையின் இரண்டு சுயாதீன உறுப்பினர்கள், நீண்ட காலம் தீர்க்கப்படாதுள்ள பிரச்சனைக்கு தீர்வொன்றினைக் காண்பதற்கு உதவியளிப்பதற்கான ஆர்வத்தினைத் தெரிவித்திருந்தனர்.

கலந்துரையாடலிற்கு வசதிப்படுத்தலை வழங்கிய இராஜாங்க அமைச்சர் கலாநிதி. ஹர்ஷா த சில்வா தலைமைவகித்த இக்கூட்டத்தில் முன்னேற்றப்பாதை பற்றிய கருத்தொருமிப்பொன்று எட்டப்பட்டது.

பணிப்பாளர் - தொடர்பூட்டல்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
011 - 2 477418 @ dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk